**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.123/2023 தேதி-05.02.2025

(P.W.1) - ஹெலன் அஜிதா

**1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. ஜீஸஸ் மகளிர் சுய உதவி குழுவின் நான் உறுப்பினர் என்றால் சரிதான். மேற்படி குழுவில் தலைவர், செயலாளர் ஆகியோர்களை குழுவின் உறுப்பனர்கள் தான் தேர்ந்தெடுப்போம் என்றால் சரிதான். தற்போதும் ஜீஸஸ் மகளிர் சுய உதவி குழு செயல்பட்டுதான் வருகிறது என்றால் சரிதான். வழக்கை நான் தாக்கல் செய்ததால் தற்போது மேற்சொன்ன குழுவில் பங்கேற்கவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன குழு எப்போது தொடங்கப்பட்டது என்றால் 12.02.2018 அன்று தொடங்கப்பட்டது. நான் சந்தா தொகையை எவ்வளவு கட்டியுள்ளேன் என்றால் ரூ.5 ஆகும். எதாவது செலவு ஏற்படும்போது மேற்சொன்ன சந்தா தொகையை செலுத்துவோம். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மேற்சொன்ன குழுவில் சரிவர செல்வதில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றாலும் நான் சரிவர மேற்சொன்ன குழுவிற்கு செல்லாததால்தான் சந்தா தொகை எவ்வளவு என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

2. வருடத்திற்கு சந்தா தொகை ரூ.100/- பெறப்படுகிறது என்றாலும் நான் தொடர்ந்து குழுவில் செல்லாததால்தான் அதுபற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன குழுவில் சேமிப்பு தொகை வாராவாரம் எவ்வளவு செலுத்தவேண்டும் என்றால் வாரம் ரூ.200/- செலுத்தவேண்டும். 2 வருடம் தாண்டிவிட்டால் வாரம் ரூ.250/- செலுத்தவேண்டும். மேற்சொன்ன சேமிப்பு தொகையைகட்ட தவறிவிட்டால் அபராதத்துடன் அடுத்தமுறை சேமிப்பு தொகை செலுத்தவேண்டும் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் சேமிப்பு தொகை முறையாக செலுத்தப்படவில்லை என்றால் சரிதான். நான் குழுவிற்கு செல்ல இயலாத சமயத்தில் வேறு நபரிடம் சேமிப்பு தொகையை கொடுத்தனுப்புவேன் என்றால் சரிதான். மேற்சொன்ன குழுவில் வருகை பதிவேடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி பதிவேட்டில் குழுவிற்கு வருகை புரிந்தவர்களுக்கு ‘X’ என்றும் வராதவர்களுக்கு ‘A’ என்றும் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். என் பெயர் ஹெலன் அஜிதா என்றால் சரிதான்.

(P.W.1) - ஹெலன் அஜிதா

<u>**1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

3. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வருகை பதிவேட்டின் நகலில் என்னுடைய வருகை என்னுடைய பெயருக்கு நேராக பதிவு ‘A’ என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நான் குழுவிற்கு சென்றுவருவேன். நான் வழக்கிறகாக குழுவிற்கு சென்று வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சேமிப்பு தொகையின் இலாபத்தை கணக்கிட்டு அனைவருக்கும் சமமாக பிரித்துக்கொடுப்பார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன சேமிப்பு தொகையில் நஷ்டம் ஏற்பட்டாலும் உறுப்பினர்கள் அனைவரும் பொறுப்பு என்றால் சரியல்ல. நஷ்டம் ஏற்பட வாய்ப்பில்லை. நான் வழக்கில் கோரப்பட்டுள்ள தொகை கற்பனையாக கேட்கப்பட்ட தொகை என்றாலும் அந்த தொகையை எனக்கு கொடுப்பதற்கு குழு பொறுப்பல்ல என்றால் சரியல்ல. சேமிப்பு தொகையை கண்காணிக்க 4-ஆம் பிரதிவாதிக்கு எந்த அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. 20.06.2020 அன்று 4-ஆம் பிரதிவாதியிடமிருந்து ரூ.50,000/- விவசாய கடனாக பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல, 28.10.2020 அன்று மேற்சொன்ன கடன் தொகையை 4-ஆம் பிரதிவாதியிடம் பெற்றுக்கொண்டேன்.

4. 4-ஆம் பிரதிவாதியிடமிருந்து நான் விவசாய கடன் ஏதும் பெறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, Society-க்கு சென்று கையொப்பம் செய்துதான் மேற்சொன்ன தொகையை பெற்றேன். மேற்படி விவசாய கடன் பெற்றால் எனக்கு விவசாய கடன் அட்டை வழங்கப்பட்டது என்றால் அவ்வாறு எந்த விவசாய கடன் அட்டையும் வழங்கப்படவில்லை. எனக்கு வழங்கப்பட்ட தொகையில் Share (வைப்பு நிதி) ஏதேனும் நான் செலுத்தினேனா என்றால் இல்லை. கடன் தொகையை செலுத்தி முடித்தபிறகு மேற்சொன்ன கடன் அட்டையில் கடன் தொகை செலுத்தப்பட்டது என்று முத்திரை பதித்துவிடுவார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, தனி நபராக கடன் பெற்றால் அவ்வாறு முத்திரை பதிப்பார்கள், நான் குழு மூலம் கடன் பெற்றதால் அவ்வாறு நடைமுறை ஏதுமில்லை. நான் விவசாய கடன் எடுக்காததால்தான் என்னால் நீதிமன்றத்தில் விவசாய கடன் அட்டையை தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. 05.10.2020 அன்று 4-ஆம் பிரதவாதியிடமிருந்து மேற்சொன்ன குழு ரூ.10 லட்சம் தொழில் கடன் பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன 4-ஆம் பிரதிவாதியிடம் தொழில் கடன் வேண்டி தாக்கல் செய்த விண்ணப்பத்தில் 12-வது நபராக நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

(P.W.1) - ஹெலன் அஜிதா

**1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

5. மேற்சொன்ன குழுவால் எனக்கு வழங்கபட்ட ரூ.50,000/- மற்றும் வட்டியை மேற்சொன்ன குழுவிற்கு செலுத்த நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 05.10.2020 அன்று நான் மேற்சொன்ன ரூ.50,000/- ற்கு அசலாக மாதந்தோறும் ரூ.2,500/- மற்றும் வட்டியாக ரூ.500/- மொத்தம் சேர்த்து ரூ.3,000/- செலுத்த நான் கடமைப்பட்டவர் என்றால் 4 மாதங்களாக நான் கட்டியுள்ளேன், அதன்பிறகு கடன் கட்டதேவையில்லை கடன் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாக சொன்னார்கள் அதனால் கட்டவில்லை. மேற்சொன்ன 4 மாதங்களுக்கான தொகையை எங்கள் குழு மூலமாகத்தான் 4-ஆம் பிரதிவாதியிடம் செலுத்தினேன் என்றால் சரிதான். தனியாக ஒருநபர் பணம் செலுத்தினாலும் மொத்தமாக பணம் செலுத்தினாலும் அது குழுவிற்கான கடனாகதான் வைப்பார்கள் என்றாலும் தனிநபர் கடனாக வைக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. என் பெயரில்தான் கடன் இருக்கிறது என்று சொல்வதற்கு ஆவணம் ஏதேனும் உண்டா என்றால் சொசைட்டியில் சென்று கையொப்பம் செய்துதான் பணத்தை பெற்றுவந்தேன்.

6. பொதுவாக குழுவில் உள்ள ஒருநபரின் கடன் தொகையை தள்ளுபடி செய்யப்பட்டால் அது அனைத்து நபர்களுக்கும் பொருந்தும் என்றால் சரியல்ல. நான் சுய உதவி குழுவிற்கு ஒழுங்காக செல்லாததால் 02.04.2023 அன்று மேற்படிகுழு கூட்டத்திற்கு ஆஜராகும்படி 29.03.2023 அன்று Professional Courier மூலமாக தபால் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தபால் வந்தபிறகும் நான் குழுவிற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல, நான் குழுவிற்கு சென்றேன், எந்த பதிலும் தெரிவிக்கவில்லை. எந்த தேதியில் குழுவிற்கு சென்றேன் என்றால் தேதி நினைவில்லை. நான் சொல்வதுபோல் மேற்சொன்ன குழுவிற்கு செல்லாததால்தான் எந்த தேதி என்று குறிப்பிட்டு என்னால் கூறமுடியவில்லை என்றால் சரியல்ல. எனக்கு 4-ஆம் பிரதிவாதி கொடுத்த கடன் தொகையான பத்து லட்சத்தில் தள்ளுபடியாக ரூ.3,48,320 போக மீதமுள்ள தொகையை குழு மூலமாக செலுத்தப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு செலுத்திய தொகை அனைத்தும் குழு உறுப்பினர்களின் சேமிப்பு தொகையில் இருந்துதான் செலுத்தப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை போக மீதமுள்ள ரூ.35,550/- 4-ஆம் பிரதிவாதியிடம் வைப்பு

(P.W.1) - ஹெலன் அஜிதா

**1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வைக்கப்பட்டது என்றாலும் அதை எப்போது வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம் என்றால் சரியல்ல.

7. எனக்கு கிடைக்க வேண்டிய தொகையை விட அதிகமாக தொகையை இவ்வழக்கில் பொய்யாக கோரியுள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.